*2*

# தவிர்க்க வேண்டியதல்ல ஆனால் எதிர்கொள்ள வேண்டிய ஒரு கேள்வி

*இன்றைய நாட்களில் கிறிஸ்தவம் என்பது, இயேசுவின் நாட்களில், தோற்றுவிக்கப்பட்டதில் இருந்து நூற்றுக்கணக்கான ஆண்டுகளாகி இருந்த யூதத்துவம் போன்றதாக உள்ளது. இது, கிறிஸ்தவர்கள் இப்போது, பாரம்பரியப் புரிந்துகொள்ளுதலின் பல ஆண்டுகளைச் சுமந்துள்ள விசுவாச முறைமை ஒன்றைக் கையாளுகின்றனர் என்று அர்த்தப்படுத்துகிறது. இந்தப் பல்வேறு பாரம்பரியங்களை புரிந்துகொள்ளுதல் மற்றும் தக்கவகையில் மேலாண்மை செய்தல் ஆகியவற்றிற்கான விருப்பமானது உண்மையான புதிய ஏற்பாட்டு சபையாக - எல்லா அம்சங்களிலும் நாமகரணத்துவம் அற்றதாக - இருப்பதற்கான தொடர்ந்த தாகத்தை அவசியமானதாகவும் அறைகூவல் உள்ளதாகவும் ஆக்குகிறது.*

*தரப்பட்டுள்ளவற்றில் சில தேவனிடத்தில் இருந்து வந்ததாக உள்ளது, எனவே அது மாற்றப்படக் கூடாது (காண்க 2 தெசலோனிக்கேயர் 3:6). இன்னொரு புறத்தில், இயேசுவின் நாட்களில் இருந்த யூதர்களின் விஷயத்தில் உண்மையாயிருந்தது போன்றே, சில பாரம்பரியங்கள் மனிதரிடத்தில் இருந்து மாத்திரம் வந்தவையாக உள்ளன, அவைகள் ஜாக்கிரதையாகவும் சிந்தனை நிறைந்த வகையிலும் நடைமுறைப்படுத்தப்படாவிட்டால், தேவனுடைய மக்களுக்கு அவைகள் பாரமாகிவிடலாம் (காண்க மத்தேயு 15:1-9; 23:23-28).*

## அதிகாரத்துவத்தின் கேள்வியை இயேசு எதிர்கொண்டார்

*தெய்வீக நியாயப்பிரமாணத்தின் அந்தஸ்திற்கு உயர்த்தி வைக்கப்பட்டிருந்த யூதத்துவ மனிதப் பாரம்பரியங்களை இயேசு மதிக்காததால், அவர் தமது போதனைகள் மற்றும் செயல்கள் பற்றி அடிக்கடி அறைகூவல் விடுக்கப்பட்டார். அந்த அறைகூவல்கள் யாவும் செயல்விளைவில், மத்தேயு 21:23ல் பதிவு செய்யப்பட்டுள்ள விஷயத்தின் மறுதலைகளாகவே இருந்தன:*

> *அவர் தேவாலயத்தில் வந்து, உபதேசம்பண்ணுகையில், பிரதான ஆசாரியரும் ஜனத்தின் மூப்பரும் அவரிடத்தில் வந்து: நீர் எந்த அதிகாரத்தினால் இவைகளைச் செய்கிறீர்? இந்த அதிகாரத்தை உமக்குக் கொடுத்தவர் யார்? என்று கேட்டார்கள்.*

இந்தக் கேள்வியானது இயேசுவின் பூமிக்குரிய ஊழியத்தின் முடிவுக்கு அண்மையில் எழுந்தது. சில காலத்திற்கு இயேசு, இஸ்ரவேல் நாடு முழுவதும் சென்று, தேவனுடைய இராஜ்யத்தைத் தாம் கொண்டு வரப்போவதாக அறிவித்துக் கொண்டிருந்தார். அவரது போதனையானது அவரது நாட்களில் இருந்த மக்கள் எதிர்பார்த்தது போன்று இருக்கவில்லை. அவர்களின் கண்ணோக்கில், அவரது செய்தி அபாயகரமானதாகவும் புதிதாகவும் இருந்தது. அப்படிப்பட்ட கூற்றுக்களை ஏற்படுத்தும் உரிமையை அவருக்குக் கொடுத்தது யார் என்று அறிந்துகொள்ள அவர்கள் அவரிடத்தில் வற்புறுத்திக் கேட்டனர்.

இதுபோன்ற கேள்விகளுக்கு அவரைப் பின்பற்றியவர்களில் சிலர் பதில் செயல் செய்துள்ள வகையின் வெளிச்சத்தில் அவரது பதிலுரையை நாம் படிக்கும்போது, அவர் *கூறாத* விஷயத்தினால் நாம் தாக்கப்படுகிறோம். இயேசு, தமது போதகத்திற்குத் தாம் அதிகாரத்துவம் தர வேண்டும் என்று வழக்காடவில்லை அல்லது அவர் மற்ற சந்தர்ப்பங்களில் செய்திருந்தது போன்று (யோவான் 13:13), கர்த்தர் என்ற வகையில் தமது அதிகாரத்துவத்தை உறுதிப்படுத்தவில்லை. அதற்குப் பதிலாக அவர், அவர்கள் தங்கள் கேள்வியைக் கேட்க உரிமை கொண்டிருந்தனர் என்று மறைமுகமாக உணர்த்தினார்: "இயேசு பிரதியுத்தரமாக: நானும் உங்களிடத்தில் ஒரு காரியத்தைக் கேட்கிறேன், அதை எனக்குச் சொல்லுவீர்களானால், நானும் இன்ன அதிகாரத்தினாலே இவைகளைச் செய்கிறேனென்று உங்களுக்குச் சொல்லுவேன். யோவான் கொடுத்த ஸ்தானம் தேவனால் உண்டாயிற்றோ? மனுஷரால் உண்டாயிற்றோ? யாரால் உண்டாயிற்று? என்று கேட்டார்" (மத்தேயு 21:24, 25அ). இயேசுவை மக்கள் முன்னிலையில் கனவீனப்படுத்த வேண்டும் என்ற அவர்களின் முயற்சிக்குள்ளாக இயேசுவின் உட்கண்ணோக்கை அவரது கேள்வி காண்பித்தது. மத்தேயுவின் எடுத்துரைப்பு பின்வருமாறு தொடருகிறது:

> அதற்கு அவர்கள்: தேவனால் உண்டாயிற்றென்று சொல்வோமானால், பின்னை ஏன் அவனை விசுவாசிக்கவில்லை என்று நம்மை கேட்பார்; மனுஷரால் உண்டாயிற்றென்று சொல்வோமானால், ஜனங்களுக்குப் பயப்படுகிறோம், எல்லாரும் யோவானைத் தீர்க்கதரிசியென்று எண்ணுகிறார்களே என்று, தங்களுக்குள்ளே ஆலோசனைபண்ணி, இயேசுவுக்குப் பிரதியுத்தரமாக: எங்களுக்குத் தெரியாது என்றார்கள் (மத்தேயு 21:25ஆ-27அ).

இயேசு, அவர்களின் நோக்கங்களை வெளிப்படுத்திய நிலையில், அவர்களின் கேள்விக்குப் பதில் அளிக்க மறுத்து விட்டார்: "நானும் இன்ன அதிகாரத்தினால் இவைகளைச் செய்கிறேனென்று உங்களுக்குச் சொல்லேன்" (மத்தேயு 21:27ஆ).

அவர்கள் இயேசுவின் கேள்விக்குப் பதில் அளிக்க மறுத்துவிட்டதால், அவர்களின் கேள்விக்கு அவரும் பதில் அளிக்கவில்லை. இருப்பினும் கேள்விகேட்பதற்கான அவர்களின் உரிமையைப்பற்றி இயேசு வழக்காடவில்லை. மாற்றத்திற்கான இயேசுவின் அழைப்பானது, அந்த முடிவை மேற்கொள்ளுவதற்கான தமது உரிமையைத் தற்காக்க அவர் மனவிருப்பமாக இருக்க வேண்டும் என்று அர்த்தப்படுத்தியது என்ற கொள்கையை இயேசு ஏற்றுக்கொண்டார். அவரது ஊழியத்தின் போதனைகளும் பணிகளும், அவரது

அதிகாரத்துவத்திற்குச் சாட்சியளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டிருந்தன (காண்க - யோவான் 20:30, 31).

இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்கள், "இந்த விஷயங்களை நீங்கள் எந்த அதிகாரத்தைக் கொண்டு செய்கிறீர்கள்? இந்த அதிகாரத்தை உங்களுக்குக் கொடுத்தது யார்?" என்ற கேள்வியின் வடிவங்களைக் கேள்விப்படலாம். அதற்குத் தக்க வகையில் பதிலுரை அளிக்க நாம் தயாராக இருக்க வேண்டும்.

இயேசுவைப் பின்பற்றுதலுக்கான போதனை மற்றும் விசுவாசத்தை நடைமுறைப்படுத்துதல் ஆகியவற்றின் செயல்முறையில், நாம் தைரியமான மற்றும் அறைகூவல் விடுக்கும் உரிமைகோருதல்கள் சிலவற்றை ஏற்படுத்துகிறோம். இயேசுவே தேவனிடத்திற்குச் செல்லும் ஒரே வழியாக இருக்கிறார், அவர் மீது விசுவாசம் கொண்டு அவரது வழியைப் பின்பற்றத் தங்களைக் கீழ்ப்படுத்தும் மக்கள் மாத்திரமே நிறைவாழ்வையும் இரட்சிப்பையும் கண்டறிய முடியும் என்று நாம் அறிவிக்கிறோம். சபை போதிக்கும் மற்றும் செய்யும் விஷயங்கள், அவர் கூறியவற்றிற்கு முற்றிலும் இசைவிணக்கமாக இருக்க வேண்டும் என்று நாம் உறுதிப்படுத்துகிறோம். கேள்வியானது இன்றைய நாட்களில் மாறுபட்ட வடிவங்களை மேற்கொள்ளலாம், ஆனால் நாம் போதிக்கும் மற்றும் நடைமுறைப்படுத்தும் விஷயங்கள் பற்றிய அதிகாரத்துவத்தைக் காண்பிக்கும்படி நம்மிடத்தில் இன்னும் இவ்வுலகம் கேட்கிறது.

## அதிகாரத்துவம் பற்றிய கேள்வியானது இன்றைய நாட்களில் எதிர்கொள்ளப்பட வேண்டும்

இன்றைய நாட்களில் அதிகாரத்துவம் பற்றி நாம் எதிர்கொள்ளும் கேள்வியானது, இயேசு எதிர்கொண்ட கேள்வியைக் காட்டிலும் அதிகமான அடிப்படை மட்டத்தில் இருந்து தொடங்குகிறது. இயேசுவும் அவருக்கு அறைகூவல் விடுத்தவர்களும், தேவன் இருக்கிறார், மற்றும் மக்கள் பின்பற்றும்படி தேவன் எதிர்பார்க்கும் திட்டம் ஒன்றை அவர் கொண்டுள்ளார் மற்றும் அவரது திட்டம் பற்றிய சத்தியம் கண்டுபிடிக்கப்பட்டு அறியப்பட முடியும் என்று ஒப்புக்கொண்டிருந்தனர். இந்தக் கருத்துக்கள், அதிலும் குறிப்பாக மூன்றாவது கருத்தானது, நமது உலகத்தில் உள்ள பலர் ஏற்றுக்கொள்ளாத சத்தியங்களாக உள்ளன. பீட்டர் கிரீஃப்ட் என்ற தத்துவஞானி, "[கிறிஸ்தவ] தத்துவத்தை வெற்றி கொள்ளுதல்" என்பதே நவீன மேற்கு நாடுகளில் தாக்குதலுக்கான சாத்தானுடைய திட்டமாக உள்ளது என்று உற்றுநோக்கியுள்ளார். துரதிர்ஷ்டவசமாக, இந்த "சூழ்ச்சியானது குறிப்பாக, அமெரிக்க சமுதாயத்தில் நன்கு செயல்படுகிறது, ஏனென்றால் [அமெரிக்காவில் உள்ள மக்கள்] தத்துவத்திற்கு அதிக கவனம் செலுத்துவதில்லை, எனவே அவர்கள் அங்கே தங்கள் பாதுகாப்பு கீழே தாழ அனுமதிக்கின்றனர்."[1] இன்றைய நாட்களில் மக்கள், பழங்காலத்தில் இருந்தவர்கள் அறிந்திருந்தவற்றை தாங்கள் மறந்து விட்டது போன்று செயல்படுகின்றனர்: அந்த செயல்கள் கருத்துக்களின் வெற்றிடத்தில் நடைபெறுவதில்லை. அதற்குப்பதிலாக, மக்கள் தாங்கள் செய்யும் வழிகளைச் சிந்தித்ததால் அவர்கள் அவ்வாறு செயல்படுகின்றனர்.[2] சிந்தித்தல் சரியாக இருக்கும் என்றால் செயல்கள் சரியாக இருக்கும். தவறான சிந்தனை தவறான விளைவுகளை உண்டாக்குகிறது.

சத்தியம் முற்றானது என்ற கருத்தைப் புறக்கணித்தல் பரவலாகிவருதலைப் பற்றி ஆழ்ந்து சிந்தியுங்கள். ஒரு எழுத்தாளர், "முற்றான சத்தியம் - எல்லாக் காலங்கள் மற்றும் கலாச்சாரங்களிலும் எல்லா மக்களுக்கும் உண்மையாக இருக்கும் சத்தியம் - என்ற விஷயம் ஏதேனும் உண்டா என்று மக்களிடத்தில் கேட்கப்பட்ட, ஒரு பெரிய பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்ட ஒழுங்கமைவற்ற இருபத்துக்கும் அதிகமான பேட்டிகளின் வரிசைத் தொடர்" பற்றி அறிக்கை வெளியிட்டார். ஒருவரைத் தவிர மற்ற எல்லாரும் பின்வருவன போன்ற வார்த்தைகளைக் கொண்டு பதில் உரைத்தனர்: "நீங்கள் நம்புகிற எதுவும் சத்தியமாக உள்ளது"; "முற்றான சத்தியம் என்று ஒன்றும் இல்லை; முற்றான சத்தியம் என்பதுபோன்ற விஷயம் இருந்தது என்றால், அது என்ன என்று நாம் அறிந்து கொள்வது எவ்வாறு?"; "முற்றான சத்தியத்தின்மீது நம்பிக்கை கொண்ட மக்கள் அபாயகரமானவர்களாக உள்ளனர்." "சார்புநிலைத் தத்துவம்" என்று அழைக்கப்படும் சத்தியம்பற்றிய இந்தக் கண்ணோக்கானது "வளர்ந்துவரும் தொகுப்பு மனச்சாட்சியை" பிரதிபலிக்கிறது என்று இந்த எழுத்தாளர் சரியாகக் குறிப்பிட்டார். "சத்தியம்/உண்மை என்பது ருசியின் குறிப்பிடத்தக்கதற்ற விஷயங்களிலும் நடப்பிலும் மாத்திரமல்ல, ஆனால் ஆவிக்குரியவிஷயங்கள், ஒழுக்கரீதியான விஷயங்கள் மற்றும் உண்மைத்தன்மை ஆகியவற்றிலும்கூட எப்பொழுதும் மாறிக்கொண்டே இருக்கிறது" என்பது பரவலான ஒரு நம்பிக்கையாக உள்ளது.[3]

போல்ஸ்ட்டர் ஜார்ஜ் பர்னா என்பவர், மேற்கத்தியக் கலாச்சாரத்தில் சார்பளவுத் தத்துவத்தின் வளர்ந்துவரும் பிரபலத்தன்மை பற்றிப் பதிவுசெய்துள்ளார். அவர், "1991ல் அமெரிக்க மக்கள் தொகையில் 67 சதவிகிதத்தினர் முற்றான சத்தியம் உள்ளதென்று நம்புவதில்லை, 1994ல் இந்த அளவானது 75 சதவிகிதமாக உயர்ந்தது" என்று அறிக்கை வெளியிட்டார்.[4] 1991ல் வெளியிடப்பட்ட முதல் அறிக்கைக்குப் பதினோரு ஆண்டுகள் பிற்பாடு, 17 டிசம்பர் 2002ம் தேதியிட்ட ஒரு செய்தி வெளியீட்டில் அவர் பின்வருவதைக் குறிப்பிட்டு அதே பொது எண்ணிக்கைகள் பற்றி அறிக்கை வெளியிட்டார்:

> வயதுவந்தவர்கள் மற்றும் இளம்பருவத்தினர், கிறிஸ்தவர்கள் மற்றும் கிறிஸ்தவர் அல்லாதவர்கள் ஆகியோரில் ஒரு பெரும்பான்மை அளவினர், முற்றான ஒழுக்கரீதியான சத்தியம் எதுவும் இல்லை என்று மனநிறைவு கொண்டுள்ளனர். வயது வந்தவர்கள் மூன்று பேரில் இரண்டுக்கும் அதிகமானவர்களும், இளம் வயதினர் ஐந்து பேரில் நான்குக்கும் அதிகமானவர்களும் சத்தியம் என்பது எப்போதுமே தனிநபர் மற்றும் சூழ்நிலைகள் ஆகியவற்றைச் சார்ந்ததாக உள்ளது என்று வாதிடுகின்றனர்.

12 பிப்ரவரி 2002ல் வெளியிடப்பட்ட இன்னொரு ஆய்வு அறிக்கையில் சத்தியம் பற்றிய இரண்டு நம்பிக்கைகளுக்கு மத்தியிலான ஏற்றத்தாழ்விற்கான (83 சதவிகிதத்தினர் முற்றான சத்தியம் என்று ஒன்றும் இல்லை என்று கூறுகின்றனர்) காரணம் மற்றும் வயதுவந்தவர்களின் கண்ணோட்டம் (66 சதவிகிதத்தினர் இந்தக் கருத்தைப் புறக்கணிக்கின்றனர்) ஆகியவை 18 முதல் 35வரை வயதுடைய குழுவின் கண்ணோட்டத்தில் கண்டறியப்பட வேண்டியதாக உள்ளது, இவர்களில் 75 சதவிகிதத்தினர் சார்பளவியத்தில் நம்பிக்கை

கொண்டுள்ளனர். பர்னா, "சார்பளவியம் என்பது இன்றைய நாட்களின் இளம் வயதுடையவர்களுக்கு முந்திய தலைமுறையில் வேர்கொண்டிருப்பதாகத் தோன்றும் காரணத்தினால், பெருகிக்கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது" என்று முடிவுசெய்தார்.[5]

இந்த உலகத்தில், எல்லா அதிகாரத்துவமும் அறைகூவல் விடுக்கப்படுகிறது. எனவே நாம் செய்ய வேண்டியது என்ன என்பது பற்றி நமக்குக் கூறுவதற்கான தேவனுடைய உரிமைக்கு மக்கள் அறைகூவல் விடுக்கும்போது நாம் திகைப்படையக் கூடாது. அதுபோலவே, சபையில் உள்ள யாரேனும் ஒருவர், சார்பளவுக் கோட்பாட்டினால் வஞ்சிக்கப்பட்டாலும் நாம் திகைப்படையக் கூடாது. அது நமது உலகத்தில் மேலோங்கியுள்ளது, மற்றும் நாம் அதற்குப் பதிலுரைப்பதில் நன்கு செயல்பட்டு இருக்கவில்லை. பர்னா என்பவர் தொடர்ந்து நடந்துகொண்டிருந்த தமது ஆராய்ச்சியில், புகழ்பெற்ற பல சுவிசேஷக ஊழியர்களான கிறிஸ்தவர்கள் - பொதுவாகப் பழைமை வாதிகள் என்று கருதப்பட்டவர்கள், வேதாகமத்தை விசுவாசிக்கும் மக்கள் - கூட முற்றான சத்தியம் என்ற கருத்தைப் புறக்கணித்துள்ளனர் என்று கண்டறிந்துள்ளார். இதன் விளைவாக அவர்களின் விசுவாசங்கள், அவர்கள் சிந்திக்கும் விஷயங்களைக் காட்டிலும் அதிகமாக அவர்கள் உணரும் விஷயங்களின்மீது அடித்தளம் கொண்டுள்ளன.[6]

நடைமுறைச் சொற்றொடர்களில் இது, ஒரு நிலைப்பாட்டைக் காட்டிலும் இன்னொரு நிலைப்பாடு உண்மையானது என்று கூறுவதற்கான *எந்த* முயற்சியிலும், ஒருவர் நம்பிக்கையின்மையின் பொதுவான எண்ணப்போக்கினால் சந்திக்கப்படுவார். ஆகவே நாம், வாய்ப்பாட்டுப் பாடுதல் - அல்லது வேறு ஏதாவது விஷயம் - என்பதற்கு, சத்தியத்தின் இயல்புக்குக் கவனம் சிலவற்றைத் தராமல் எந்தக் கருத்தையும் ஏற்படுத்த இயலாது.

விசுவாசத்தில் நிலைத்திருக்கும் பல விசுவாசிகள் சத்தியத்தின் உரிமை கோருதலைத் தாமாகவே ஏற்றுக்கொள்வது இல்லை. இந்தக் காரணத்தினால், நாம் நமது தர அளவைகளைத் தாழ்த்தும் இடர்ப்பாட்டை மேற்கொள்வதுடன் சத்தியத்தின் இயல்பு பற்றி பொதுவாகவும் குறிப்பிட்ட சத்தியங்களைப் பற்றியும் சமரசம் செய்துகொள்ளும் நிலைப்பாடுகளை ஏற்றுக்கொள்கிறோம். சூடாக்கப்படும் தண்ணீர் உள்ள பாத்திரத்தில் உள்ள தவளையானது, அந்தத் தண்ணீர் கொதிக்கும் வரை அதில் அமர்ந்திருந்து உயிரோடேவேகவைக்கப்படும் என்பது போலவே, தேவனுடைய வசனத்தின் அதிகாரத்துவத்தின்மீது விசுவாசம் கொண்டிருப்பதாக உரிமைகோரும் நாமும், சத்தியம் மற்றும் முற்றானவைகள் பற்றிய நமது கண்ணோட்டங்கள் அழிந்துபோக அனுமதிக்கக் கூடும். நிறைவாக, நாம் அறிந்துகொள்ள வேண்டும் என்று தேவன் விரும்பும் விஷயங்களை விசுவாசிப்பதையும் போதிப்பதையும் நிறுத்திவிடக் கூடும். பழங்கால இஸ்ரவேல் மக்களைப் போன்று, கிறிஸ்தவர்கள் நம்மைச் சுற்றிலும் உள்ள "சகல ஜாதிகளையும்போல" அதிகம் அதிகமாக ஆவதற்கான இடர்ப்பாட்டை மேற்கொள்கின்றனர் (காண்க 1 சாமுவேல் 8:5, 20). நாம் நமது தனித்தன்மை களை இழந்தால், தேவன் நம்மிடத்தில் எதிர்பார்க்கும் வண்ணம், உப்பாகவும் வெளிச்சமாகவும் இருப்பதை விட்டு ஒழித்து விடுவோம் (மத்தேயு 5:13-16) மற்றும் நிறைவாக தேவனுடைய விசுவாசம் நிறைந்த மக்களாக இருப்பதையும் விட்டு ஒழித்து விடுவோம்.

# முடிவுரை

இந்தக் கலாச்சார அமைவில் - நமது சொந்த விசுவாச நிறைவுக்கும் தேவனுடைய வழிகளை மக்கள் மிகச்சரியாக அறிந்துகொள்ள உதவுவதற்கான நமது முயற்சிகளுக்கும் (காண்க நடபடிகள் 18:24-26) - நாம் தேவனுடைய அதிகாரத்துவத்தைப் பற்றியும் அது நாம் செய்யும் ஒவ்வொரு விஷயத்துடன் எவ்வாறு தொடர்புகொண்டுள்ளது என்பதைப் பற்றியும் நாம் படிப்பது அவசியமாக உள்ளது. நமது விசுவாசங்கள் மற்றும் போதனைகள் ஆகியவற்றிற்கான அதிகாரத்துவத்தைக் கொடுக்கும்படியான வேண்டுகோளின் சட்டப்பூர்வமான தன்மையைக் காண்பித்த இயேசுவின் உதாரணத்தை நாம் நினைவில் கொண்டிருக்க வேண்டும். அதிகாரத்துவம் பற்றிய கருத்தை அதிக மாய் எதிர்த்து நிற்கும், தற்காலத்திய நடைமுறைகளுடன் நாம், தேவனுடைய சத்தியத்தைப் போதிப்பதைத் தொடரவேண்டும். மக்கள் குறிப்பிட்ட சில சத்தியங்களை ஏற்றுக்கொள்கின்றனர் என்று நாமாக யூகித்துவிடக் கூடாது. பவுலின் வார்த்தைகளில் கூறுவதென்றால், நாம் "எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு, அவரையே நாங்கள் அறிவித்து, எந்த மனுஷனுக்கும் புத்திசொல்லி, எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம்பண்ணுவதற்கு" உறுதிப்பாட்டை மேற்கொள்ள வேண்டும் (கொலோசெயர் 1:28).

ஒருசில ஆண்டுகளுக்கு முன்னர், நான் ஊழியக்காரனாக இருந்த சபையில் உறுப்பினராக இருந்த கல்லூரி மாணவர் ஒருவர் உதவிக்காக என்னை அணுகினார். இந்த இளைஞர் சபையில் வளர்ந்தவராக இருந்தார்; அவருடைய தந்தையும் அவருடைய மாமாவும் மூப்பர்களாக ஊழியம் செய்திருந்தனர். ஒரு மாலைவேளையில் வகுப்பிற்குப் பின்பு, அந்த இளைஞர், சபைகூடுகைகளில் வாய்ப்பாட்டு மாத்திரம் பயன்படுத்தப்படுவது ஏன் என்பது பற்றித் தமது நண்பருக்கு நான் விளக்கப்படுத்த முடியுமா என்று என்னிடத்தில் கேட்டார். அடுத்ததாக அவர் கூறிய கூற்றுதான் என்னைத் தாக்கிற்று: "நாம் செய்யும் அச்செயலுக்குக் காரணம் ஒன்றுள்ளது என்று நான் அறிவேன், ஆனால் அது என்ன என்பதை நான் அறிவதில்லை."

வேதாகம வகுப்புகளில் உணர்வுமிகுந்த கிறிஸ்தவ போதகர்களின் பாதங்களில் அமர்ந்து, அவர் செலவிட்ட பல ஆண்டுகளுக்குப் பின்பு, தாம் விசுவாசிக்கும் விஷயம் பற்றி "விசாரித்துக் கேட்க" விரும்பியவருக்கு "உத்தரவு சொல்ல" அவர் ஆயத்தமற்ற நிலையில் இருந்தார் (1 பேதுரு 3:15). இந்தப் படிப்பானது அதைக் காட்டிலும் நாம் சிறப்பாகச் செய்ய முடியும் - செய்ய வேண்டும் - என்ற உறுதிப்பாட்டுடன் எழுதப்பட்டது. "எந்த அதிகாரத்தில் ... மற்றும் இந்த அதிகாரத்தை உமக்குக் கொடுத்தது யார்?" என்ற கேள்வியானது ஒருவர் தவிர்க்கக்கூடியதல்ல ஆனால் ஒருவர் எதிர்கொள்ளக் கூடியதாக உள்ளது.

---

குறிப்புகள்

[1]Peter Kreeft, *How to Win the Culture War: A Christian Battle Plan for a Society in Crisis* (Downers Grove, Ill.: InterVarsity Press, 2002), 71. [2]இந்தக் கருத்தைப் பற்றிய வேதாகம உதாரணம் ஒன்றிற்கு எபேசியர் 4:17-24ஐக் காணவும், அவ்விடத்தில் பவுல்,

*புறஜாதியாரின் சீர்கேடான நடக்கையானது அவர்களின் "வீணான சிந்தையினால்" விளைந்தது என்று கூறத்தக்கது என்று காண்பித்தார் (வசனம் 17), "அவர்கள் புத்தியில் அந்தகாரப்பட்டு, தங்கள் இருதய கடினத்தினால் தங்களில் இருக்கும் அறியாமையினாலே" என்றார் (வசனம் 18). பின்பு அவர், கிறிஸ்தவர்களின் நடக்கையும் மன அமைவும் அதற்கு மிகச்சரியாக எதிரான நிலையில் இருக்க வேண்டும் என்று சுட்டிக்காண்பித்தார். எபேசு நகரில் இருந்த பவுலின் வாசகர்கள் "இயேசுவினிடத்திலுள்ள சத்தியத்தின் படியே" கேட்டறிந்து, "போதிக்கப்பட்டிருந்தனர்" (வசனம் 21) மற்றும் அவர்கள் "புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளும்படி" முற்றிலும் மாறுபட்ட வாழ்வு முறையைத் தழுவிக் கொண்டு "[தங்கள்] உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி" இருந்தனர் (வசனங்கள் 23, 24அ). அவர்கள் தங்கள் பழைய வாழ்வில் இருந்து புதிய வாழ்விற்குக் கடந்து வந்ததற்கான அச்சாணிபோன்ற கருத்து 20ம் வசனத்தில் காணப்படுகிறது: அவர்கள் "கிறிஸ்துவினிடத்தில் இருந்து கற்றிருந்தவை."* [3]Jim Leffel, "Our New Challenge: Postmodernism," in Dennis McCallum, ed., *The Death of Truth: What's Wrong with Multiculturalism, the Rejection of Reason and the New Postmodern Diversity* (Minneapolis: Bethany House Publishers, 1996), 31. [4]*இந்தப் புள்ளிவிபரம்* Ravi Zacharias, "Appendix B: The Inextinguishable Light," *Deliver Us From Evil: Restoring the Soul in a Disintegrating Culture* (Dallas: Word Publishing, 1996), 212 *என்ற புத்தகங்களில் மேற்கோள் காண்பிக்கப்பட்டுள்ளது.* [5]*இங்கு வெளியிடப்பட்டுள்ள செய்திகள்* Barna's website, www.barna.org, under the headings "Absolute Truth" and "Relativism" *என்ற வலைத்தளத்தில் காணப்படுகின்றன.* [6]*பர்னாவின் ஆய்வு விளைவுகளை மேற்கோள் காண்பிக்கும் பிப்ரவரி 2002ல் செய்தி வெளியீட்டில், "மறுபடி பிறந்த கிறிஸ்தவர்கள்" என்று அவர் அழைத்த பிரிவில் 32 சதவிகிதம் மக்களே தாங்கள் அதற்குத் தகுதியானவர்களாக இருந்ததாகவும் முற்றான ஒழுக்கம் பற்றி நம்பிக்கை கொண்டு இருந்ததாகவும் கூறினார்கள் என்று பர்னா குறிப்பிட்டார். "மறுபடி பிறந்த" இளைஞர்களில் 9 சதவிகிதத்தினர் மாத்திரமே சார்பளவுக் கோட்பாட்டைப் புறக்கணிப்பதாக உரிமை கோரினர். (சகரியா, 212.)*